JAFFNA COLLEGE ★ UNDERGRADUATE
26 JUL 1972

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
[illegible] 389

தேசிய தினசரி

மலர் 1
இதழ் 166

யாழ்ப்பாணம் ஆடி 11 ரபி; அவ்; 14 புதன்கிழமை (26-7-72)

பிரகாசமான - நீகரற்ற வெண்மை தருவது!




எங்கும் கிடைக்கும்

# கிராம நீதிமன்றங்கள் தரம் உயர்த்தப்படும்

## நீதி அமைச்சர் தகவல்

கொழும்பு, செவ்

கிராம நீதிமன்றங்கள் யாவும் மாஜிஸ்ரேட் நீதிமன்றங்களாகத் தரம் உயர்த்தப்படவிருக்கின்றன.

பொது நிர்வாகம், உள்ளூராட்சி, நீதித்துறை அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா இத்தகவலை மாத்தளை நீதிமன்றத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் வெளியிட்டார்.

நீதிமன்றங்களில் ஏற்படும் காலதாமதங்களையும் பணவிரயத்தையும் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக திரு. பீலிக்ஸ் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களை விசாரிப்பதற்காக மாஜிஸ்ரேட்டுகளுக்கு விரிவான அதிகாரங்கள் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வேலையற்றோர் தொகை அதிகரிக்கிறது

கொழும்பு, செவ்வாய்

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வது இலங்கையின் [illegible] பொருள் ஏற்றுமதியைக் கடுமையாகப் பாதிக்கும் என பேராசிரியர் டட்லி சீயர்ஸ் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் டட்லி சீயர்ஸ் சசெக்ஸ் அபிவிருத்திக் கல்வி நிறுவன அதிபராவார்.

நேற்று முன்தினம் மத்திய வங்கி மாநாட்டு மண்டபத்தில் 'உலகின் வேலையில்லாப்பிரச்னை' எனும் பொருள்பற்றி உரையாற்றுகையிலேயே பேராசிரியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேலையின்மைப் பிரச்னை பற்றி பேராசிரியர் பேசுகையில் இலங்கையின் வேலையில்லாதோர் பிரச்னை வருடம் வருடம் 100,000 ஆல் அதிகரித்து வருவதாகவும், தொழிலாளர் வகுப்பினரின் அதிகரிப்பே இதற்குக் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

## தமிழக அரசுக்கு எதிராக

### சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

சென்னை, ஜூலை 25

தமிழ்நாடு ஆலயங்களுக்குள் பிற மதத்தினர்களும் சென்று வழிபடலாமென தமிழ்நாடு அரசு செய்த முடிவு செல்லுபடியாகாது எனச் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்து அரசின் உத்தரவை ரத்துச் செய்துள்ளது.

அரசு மேற்கொண்ட செயல் மாநிலசட்டசபைக்கு அப்பாற்பட்டது என்றும் இதில் தலையிடும் உரிமை அரசுக்கு இல்லை என்றும் சுப்ரீம் கோர்ட் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆட்பதிவு வேலைகள்

கொழும்பு, செவ்

ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டத்தோடு தொடர்புடைய சகல வேலைகளும் சுமுகமாக நடைபெறுகின்றன என ஆட்பதிவு ஆணையாளர் திரு கி. பி. எம். ஏகநாயக்கா தெரிவித்துள்ளார்.

தமது இலாகாவின் மேற்படி வேலைகள் சம்பந்தமாக நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே மேற்கண்ட தகவலை திரு ஏகநாயக்கா தெரிவித்துள்ளார்.

## நாடு திரும்பினார்

கொழும்பு, செவ்.

பீக்கிங்சார்பு கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. என். சண்முகதாசன் திங்கட்கிழமை இரவு சீனாவிலிருந்து நாடு திரும்பினார்.

### வல்லிபுரக்கோவில் பிரச்னை:

## யாழ். பொலிஸ் அதிபரை தூதுகோஷ்டி சந்தித்தது

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைத் தமிழரின் வழிபாட்டுக்கும் கதவடைக்கப்பட்டிருக்கும் வல்லிபுரக் கோவிலை அவர்களும் வழிபட வசதியாக ஆலயத்தைத் திறந்துவிடுவதற்கு ஆவன செய்வதாக வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தம்மைச் சந்தித்துப் பேசிய தூதுக்குழுவிடம் தெரிவித்தார். ஆடிப்பிறப்பன்று நடைபெற்ற விசேஷ பூசை வழிபாடுகளின்போது சிறுபான்மைத்தமிழர் மகாசபையைச் சேர்ந்த சிலர் ஆலயப்பிரவேசம் செய்ததைத் தொடர்ந்து இக்கோவில் கதவுகள் மூடப்பட்டன. எதிர்வரும் செப்டம்பர் மாதம் 7-ம் திகதி இவ்வாலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகும்.

உற்சவம் தடைபடாது நடைபெறவும் உற்சவ காலத்தில் சிறுபான்மைத் தமிழரும் ஆலயத்துள் சென்று வழிபடவும் ஆவன செய்யுமாறு தூதுகோஷ்டி நேற்றுக்காலை பொலிஸ் அதிபரைக் கேட்டுக்கொண்டது. இது சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி மத்திய குழு கூடி நியமித்த நடவடிக்கைக்குழுவின் சார்பில் குழுத் தலைவர் திரு. கே. வி. ராஜசிங்கம் தலைமையில் கட்டைவேலி கிராம சபை உறுப்பினர் திரு. வி. செல்லத்துரை, புலோலி கி. ச. உறுப்பினர்கள் திருவாளர்கள் வி. வேலும்பிள்ளை, கே. கேசவநம்பி, ல. ச. கட்சி [illegible] கிளைத்தலைவர் திரு. ஏ. நடராசா, ல. ச. க. வெல்லமான் தோட்ட [illegible] கிளைத் தலைவர் திரு. கே. முருகேசு ஆகியோர் இத் தூதுக்குழுவில் இடம்பெற்றனர்.

கோவிலைத் திறந்துவிடுவதற்கும் சிறுபான்மையினர் உட்சென்று வணங்குவதற்கும் ஆவன செய்வதாகப் பொலிஸ் அதிபர் தூதுகோஷ்டியிடம் உறுதியளித்ததாகவும் தமது முயற்சி பயனளிக்காத பட்சத்தில் கோவில் மனேஜர் திரு மு. காசிநாதர் பிரதிநிதி திரு வி. கே. வல்லிபுரம் ஆகியோர்மீது கோவில் கதவை மூடிய குற்றச்சாட்டின்மீது வழக்குத் தொடரப்படுமென்றும் பொலிஸ் அதிபர் தம்மிடம் தெரிவித்ததாகவும் சமாதான முறையில் ஆலயக் கதவுகளைத் திறக்கின்ற பட்சத்தில் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாதென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்ததாக அவர் சொன்னார்.

இவ்வாலயப்பிரவேசம் அமைதியான முறையில் உள்ளூர்வாசிகளால் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்தாராம்.

(5ம் பக்கம் பார்க்க)

## மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களும் விடுதலை

காலி, செவ்.

கே. ரி. டானியல் என்பவருக்கு வேண்டுமென்றே படுகாயம் விளைவித்ததாக ஹிக்கடுவைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் சாட்சியங்களின் முரண்பாடு காரணமாக காலி மேலதிக மாவட்ட நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

ஹிக்கடுவைப் பொலிஸ் பாதுகாப்பிலிருந்த கே. ரி. டானியல் என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தை மரணமானார். இவரது மரணம் சம்பந்தமாக கே. விமலபால, கே. ஏ. ஜயசேகரா, சிதம்பரப்பிள்ளை ஆகிய மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீது டானியலுக்கு வேண்டுமென்றே படுகாயம் ஏற்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரணைசெய்த காலி மாவட்ட மேலதிக நீதிபதி திரு ஜே. எப். ஏ. டயஸ் சாட்சியங்களின் முரண்பாடு காரணமாக எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

# பிரிட்டிஷ் அரசுக்கு பெரும் தலையிடி:

## துறைமுக வேலைநிறுத்தம் மேலும் பரவும் அறிகுறி

### தொழில்துறைகள் ஸ்தம்பிதம்

லண்டன், ஜூலை 25

பிரிட்டனில் நேற்று ஆரம்பமான வேலைநிறுத்தம் நாட்டின் தொழில்கள் யாவற்றையும் முடக்கச் செய்துள்ளது. அதேசமயம் வேலைநிறுத்தங்கள் மேலும் விரிவடையக் கூடிய அபாயமும் தோன்றுகின்றது.

துறைமுகத் தொழிலாளர்கள் 5 பேர் காவலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாகின.

தொழில் நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்புக்குப் பணிய மறுத்ததன் காரணமாக இந்த ஐந்து துறைமுக ஊழியர்களும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்யும்படி கோரி துறைமுகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளனர். இதனுடன் நாட்டின் எல்லாத் துறைமுகங்களிலும் வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. இவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து இதர பெரிய தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் வேலைநிறுத்தத்தினை ஆரம்பித்துள்ளார்கள்.

சவுத்வேல்ஸ், ஸ்கொட்லாந்து யோர்க்ஷயர் போன்ற இடங்களிலுள்ள சுரங்கத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளார்கள்.

பிரிட்டனில் வெளியாகும் 8 செய்திப் பத்திரிகைகளும் இன்றைய தினம் வெளிவரவில்லை. துறைமுக ஊழியர்களுக்கு ஆதரவாக இப்பத்திரிகைகளின் அச்சுக்கோர்க்கும் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ததால் பத்திரிகைகள் வெளிவரவில்லை.

வேலைநிறுத்தங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்காக பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு ஹீத் பெரும் பாடுபட்டு வருகின்றார்.

நேற்று பிரதான தொழிற் சங்கங்களின் தலைவர்கள் பிரதமமந்திரி திரு ஹீத்தைச் சந்தித்துப் பேசினார்கள். ஆனால் இந்தப் பேச்சுகளிலும் எதுவித பயனும் ஏற்படவில்லை. இன்று மீண்டும் பிரதம மந்திரியை அவர்கள் சந்திக்கவிருந்தனர் என்றாலும் இந்த யோசனையைக் கைவிட்டு விட்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

துறைமுக ஊழியர்கள் 5 பேரையும் விடுதலைசெய்யுமாறு அவர்கள் வற்புறுத்தியுள்ளனர். அவர்களைத் தொடர்ந்து காவலில் வைத்திருந்தால் தொழிற்சங்க நடவடிக்கைகள் மேலும் விரிவடையும் என்று அவர்கள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொழிலாளர் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும்படி தொழிற்சங்கங்கள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்து விட்டது. காவலில் உள்ள துறைமுக ஊழியர்கள் நீதிமன்ற உத்தரவுகளுக்குப் பணிந்து போக இணங்குவார்களானால் அவர்களை விடுதலை செய்வதில் ஆட்சேபமில்லையென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பிரச்னை தொடர்ந்து நீடிக்குமானால் பிரிட்டனின் பொருளாதார உற்பத்திகள் யாவும் பெருமளவில் பாதிக்கப்படுமென்று அஞ்சப்படுகின்றது.

இதேசமயம் பிரிட்டிஷ் துறைமுகத் தொழிலாளர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதத்தில் பிரான்சிலும் துறைமுகத் தொழிலாளர்கள் எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளனர். பிரிட்டிஷ் சாமான்களை ஏற்றிஇறக்குவதில்லையென்று பிரஞ்சுத் துறைமுகத் தொழிலாளர்கள் முடிவுசெய்துள்ளனர்.

## 'பதவிக்கு வந்ததும் மக்களை மறந்துவிட்டனர்'

### சில அமைச்சர்கள் பற்றி எம். பி.

சாவி, செவ்வாய்

கிராம மக்களின் தொடர்புகளை ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் சிலர் இழந்து வருகின்றனர் என்று தேசிய அரசுப் பேரவையின் குழுக்களின் உபதலைவர் திரு சேனபால சமரசேகரா எச்சரித்தார்.

மடுக்கொடை என்றஇடத்தில் ஒரு நிலையத் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு சமரசேகரா மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

அம்பிலிமகேத் தொகுதிப் பிரதிநிதியான திரு சமரசேகரா மேலும் பேசுகையில் முன்னைய தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கும் இன்றைய ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் சிலருக்குமிடையில் அதிக வித்தியாசமிருப்பதாகத் தமக்குத் தெரியவில்லையென்று கூறினார். முன்னைய அரசாங்க அமைச்சர்களும் இன்றைய அரசாங்க அமைச்சர்கள் சிலரும் பதவிக்கு வந்த பின் பொதுமக்களுடன் தொடர்பை புறக்கணித்து விட்டனரென்று கூறினார்.

நாட்டை முன்னேற்ற வேண்டுமென்று பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா உழைக்கின்றாரென்றும் பிரதமர் உழைப்பதில் பத்துச் சத விகிதமாகுதல் மந்திரிகள் உழைத்தால் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிச் சிறிது கூட ஐயம்கொள்ளத் தேவையில்லையென்றும் கூறிய திரு. சமரசேகரா ஐந்தாண்டுத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பளிக்கும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்

மற்றும் பலரும் பேசினர்.

## இஸ்ரேலிய ஜெட் சுட்டுவீழ்த்தப்பட்டது

### எகிப்தியர் அறிவிப்பு

எகிப்து, ஜூலை 25

இஸ்ரேலிய பெண்டம் ஜெட் விமானம் ஒன்றைச் சுட்டுவீழ்த்தியதாக எகிப்தியர் அறிவித்துள்ளனர்.

எகிப்திய வான்பிராந்தியத்தில் ஊடுருவியதால் இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இஸ்ரேலியர் இதை மறுத்துள்ளனர். தங்கள் விமானம் எதுவும் சுட்டு வீழ்த்தப்படவில்லையென்று அவர்கள் தெரிவித்துள்ளனர். சூயஸ்கால்வாய்ப் பகுதியில் கடைப்பிடித்து வந்த போர் நிறுத்தத்தை எகிப்தியர் மீறிவிட்டார்கள் என்று இஸ்ரேலியர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

**சதாத் விளக்கம்**

எகிப்திலிருந்து சோவியத் ராணுவ நிபுணர்களை வெளியேறும்படி தாம் உத்தரவிட்டதற்கான காரணங்களை எகிப்திய அதிபர் அன்வர் சாதாத் விளக்கியுள்ளார்.

இஸ்ரேலியருக்கு அமெரிக்கர்கள் முழுவீச்சாக உதவி புரிந்து வருகையில் எகிப்தியருக்கு உதவி புரிவதில் ரஷ்யர்கள் மிகவும் எச்சரிக்கையோடு நடந்துகொள்கிறார்கள் என்று அதிபர் சதாத் கூறியிருக்கிறார். எகிப்தியருக்கு சோவியத் ஆயுதங்கள் சப்ளையாவதற்கான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டதென்றும் ஆனால் அது செயல்படுத்தப்படவேயில்லையென்றும் சதாத் தெரிவித்துள்ளார்.

## ஆலயங்களை முன்னோர் ஏன் அமைத்தனர்?

மட்டுவில், செவ்.

"மனிதா வாழ்வின் முக்கிய குறிக்கோள் தம்மை இறைவனிடம் அர்ப்பணிப்பதாகும். இச்சாதனைக்கு ஆலயங்களே பெரும் அனுகூலமாக அமைகின்றன" என்று நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் ஆலயத்தில் பேசிய [illegible] மணி, சி. விநாசித்தம்பி கூறினார். ஆலய தர்மபரிபாலகரும் பிரதமகுருவுமான பிரம்ம ஸ்ரீ க. பிட்சாடனக் குருக்கள் தலைமைதாங்கினார். திரு. விநாசித்தம்பி தொடர்ந்து கூறியதாவது:

"இறைவனின் மகத்துவத்தை உணர்ந்து நம்மை நாம் அவனிடம் அர்ப்பணிப்பதற்கான சாதனையைச் செய்வதற்கேயே நமது முன்னோர் ஆலயங்களை அமைத்து வைத்துள்ளனர். திருக்கோவில் அமைப்புடன் கூடிய முக்கிய அம்சமாக உள்ளது தேர். இறைவனுடைய பெருமையையும், அவனுக்கும் நமக்குமுள்ள தொடர்பையும் பெருமான் நமக்காகச் செய்யும் கருணையுடன் கூடிய ஐந்தொழிலையும் முழுமையாக உணர்த்தும் சின்னம் தேர். நாம் காணுகின்ற இப்பிரபஞ்சத்தில் வைத்தே இறைவனை உணரச் செய்தனர்கள் நம் முன்னோர்கள்.

### பிரியாவிடை அளித்தனர்

உடுவில், செவ்வாய்

"மாணவர்கள் ஏட்டுக்கல்வியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. அவர்கள் ஏட்டுக்கல்வியின் பயனை அனுபவிக்க ஆரோக்கியம் தேவை. இந்த உயர்ந்த நோக்குடன் மாணவர்களுக்கு உயர்கல்வியையும், உடற்பயிற்சிக் கல்வியையும் போதித்தவர் திரு. சி. தியாகராசா" என்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் திரு. சி. தியாகராசாவின் பிரிவுபசார விழாவில் பேசிய மேற்படி கல்லூரி அதிபர் திரு. பி. ஏகாம்பரம் கூறினார்.

திரு. சி. தியாகராசா அதிபராகப் பதவி உயர்வுபெற்று பளை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஸ்கந்தா ஆசிரிய மன்றம் அவருக்கு மதிய போசனவிருந்து வழங்கிப் பிரியாவிடை அளித்தது.

கல்லூரி உப அதிபர் திரு. கே. சிவகுமாரன், ஆசிரியர் திரு. இ. சிவானந்தன், திருவாளர்கள் பி. நாகரத்தினம், கே. துரைசிங்கம், சி. ஞானச்சந்திரமூர்த்தி, கு. கணேசலிங்கம் உட்படப் பல ஆசிரியர்கள் பாராட்டுரை வழங்கினர். திரு. தியாகராசாவிற்கு 'பொற்கிழி' அன்பளிப்புச் செய்யப்பட்டது.

## அணைக்கட்டுகள்மீது யு. எஸ். குண்டு வீச்சு

### ஐ நா செயலாளர் கண்டனம்

வாஷிங்டன், ஜூலை 25

வடவியட்நாமில் அணைக்கட்டுகள்மீதெல்லாம் அமெரிக்கர்கள் குண்டு வீசியதின் மூலம் அவை வெடித்தும் சேதமுற்றுமிருப்பதாகத் தமக்கு அறிக்கைகள் வந்திருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் வால்ட்ஹைம் கண்டித்திருக்கிறார்.

இந்த அணைகள் மீதான குண்டுவீச்சு வேண்டுமென்றே செய்யப்பட்டதா இல்லையா என்பது தமக்குத் தெரியாதென்று அறிவித்துள்ள டாக்டர் வால்ட்ஹைம் இவை உடைபட்டால் வடவியட்நாமில் சிவப்பு ஆற்றின் பள்ளத்தாக்குகளில் வாழும் மக்கள் பேரழிவுக்குள்ளாவார்கள் என்றும் அச்சம் தெரிவித்துள்ளார்.

வடவியட்நாமில் அணைக்கட்டுகளின்மீது அமெரிக்கர் குண்டு வீசவில்லையென்பதை பொதுச் செயலாளருக்குத் தெளிவுபடுத்தும்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு ரோஜர்ஸ் ஐ. நா. விலுள்ள அமெரிக்கத் தூதுவர் திரு புஷ்ஷைக் கேட்டிருக்கிறார்.

வடவியட்நாமியர்வேண்டுமென்று இப்படியெல்லாம் மிகைப்படுத்திய பிரசாரங்களைச் செய்துவருகிறார்களென்றும் போரை விரிவுபடுத்துவதற்காக அவர்கள் இப்படி செய்கிறார்கள் என்றும் திரு புஷ் கூறியிருக்கிறார்.

## சீறுவாங்கும் 2 விமானங்கள்

லண்டன், ஜூலை 25

பிரஞ்சு-பிரிட்டிஷ் கூட்டுத் தயாரிப்பான சூப்பர் சோனிக் கொங்கோர்ட் ரக மின்வேக விமானங்கள் இரண்டை வாங்கிக்கொள்ள சீன ஆடர் கொடுத்திருக்கின்றது.

# இதே புஷ்பாதான் அன்று விளக்குப்பிடித்த பயங்கரவாதி!

## கொள்ளையடிப்பு வழக்கில் சாட்சி

புத்தளம், செவ்வாய்

அன்று கடைக்குள் நுழைந்த கொள்ளையடித்தவர்களுக்கு விளக்குப்பிடித்த அதே புஷ்பாதான் இன்று இந்தக் குற்றவாளிக்கூண்டில் நிற்பவர் என்று புத்தளம் பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாதிகள் கொள்ளையடிப்பு வழக்கில் சாட்சியமளித்த ஒருவர் கூறினார்.

புளியங்குளமே என்ற இடத்தில் நடைபெற்ற கொள்ளையடிப்பு சம்பந்தமான வழக்கு புத்தளம் மாஜிஸ்திரேட் திரு. வே. மலலசேகர முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது புளியங்குளமேயைச் சேர்ந்த எச். ஏ. ஜயரத்தன என்ற சாட்சி முடிக்குரிய அரச வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

"துப்பாக்கி, ரைபிள்களை நீட்டிக்கொண்டு பயங்கரவாதிகள் கோஷ்டியொன்று கடைக்குள் புகுந்த சுவர் ஓரமாக என்னை வளைத்துப் பிடித்துக்கொண்டனர். இன்னொரு கோஷ்டியினர் கடையிலிருந்த சாமான்களை எடுத்தார்கள். அந்தச்சமயத்தில் கடைக்குள் இருந்த ஒரு பயங்கரவாதி "புஷ்பா அந்த விளக்கை இங்கே கொண்டு வாரும்" என்று கூறினார். அப்பொழுது வெளியில் இருந்த இந்த எதிரி விளக்கைக் கொண்டு கடைக்குள் வந்தார். நீல நிற நீட்டுக் காற்சட்டையும் நீலநிற சமிசும் அணிந்திருந்தார். அவரது பெயர் புஷ்பா என்றும் கூப்பிடப்பட்டாலும் அவருடைய கொண்டை அமைந்திருந்த முறையாலும் அவர் ஒரு பயங்கரவாத இளம் பெண்தான் என்று அறிந்து கொண்டேன். இன்று குற்றவாளிக்கூண்டில் நிற்கும் பெண் அதே புஷ்பாதான் என்பதை உறுதியாக என்னால் கூறமுடியும்".

இவ்வாறு சாட்சி கூறினார்.

1971-ம் ஆண்டு ஜூலை 3ந் திகதி இரவு 8 மணியளவில் புளியங்குளமே எச். ஏ. ஜயரத்ன என்பவரின் வியாபாரத் தலத்துக்குள் மற்றும் இவரது ஒத்துழைப்புடன் பலவந்தமாக நுழைந்து அங்கிருந்த டிரான்சிஸ்டர் வானொலிப்பெட்டி உட்பட ரூபா 1,059 பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்ததாக எம். எச். புஷ்பா என்ற பெண் மீது புத்தளம் பொலிசாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

சாட்சி மேலும் கூறுவதாவது:— 'எனது சகோதரனுக்குப் புளியங்குளமேயில் ஒரு கடையிருக்கின்றது. அங்கு நான்தான் பொறுப்பாக இருந்துவருகிறேன். சம்பவ தினம் நான் கடையின் வாசல் பகுதியில் படுத்திருந்தேன். அன்று அதிகாலை 3 மணியளவில் என்னை யாரோ தட்டி எழுப்பினார்கள். விழித்துப் பார்த்தபோது நீலநிற நீட்டு காற்சட்டைகளும் மேல்சட்டைகளும் அணிந்துகொண்டு துப்பாக்கிகளும் ரைபிள்களும் பிடித்திருந்த சிலரைக் கண்டேன். அவர்களில் ஒருவர் துப்பாக்கியை நீட்டி கடையைத் திறக்கும்படி எனக்கு கட்டளையிட்டார். நான் உயிருக்குப் பயந்து கடையின் கதவைத் திறந்தேன். பின் என்னையும் அழைத்துக் கொண்டு கடையினுள்ளே அவர்கள் போனார்கள். பின் என்னை சுவரின் ஓரமாக சாத்திவைத்துத் துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்திக்கொண்டிருந்த அதேசமயம் மற்றவர்கள் கடையிலிருந்த சாமான்களை எடுத்தார்கள். இந்த சமயத்தில் கடைக்குள் இருட்டாய் இருந்தது. உள்ளேயிருந்த பயங்கரவாதிகளில் ஒருவர் 'புஷ்பா அந்த விளக்கை இங்கே கொண்டுவாரும்' என்று கூறினார். அப்பொழுது இந்த எதிரி விளக்கொன்றை எடுத்து வந்தார். மற்றவர்கள் கடையிலிருந்த சாமான்களை கோணி சாக்குகளில் போட்டுக்கொண்டார்கள். அந்த சாமான்களின் மதிப்பு ரூ. 800 இருக்கும். இந்த எதிரி மேலே இருந்த வானொலிப் பெட்டியை எடுத்தார்.

அடுத்தநாள் இதுபற்றி ராணுவத்தினரிடம் கூறினேன். அடுத்தநாள் பொலிஸில் வாய்முறைப்பாடு கொடுத்தேன். பயங்கரவாத நடவடிக்கைகள் உக்கிரமாக இருந்தகால் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் என்னால் புகார் செய்யமுடியவில்லை.

புத்தளம் பொலிசாரால் பயங்கரவாதிகள் சிலர் பிடிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளார்கள் என்று 14-7-71ல் நான் கேள்விப்பட்டேன். எனது ரேடியோவும் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிந்து அதைப் பார்க்கப் போனேன். பொலிசார் அதை என்னிடம் காட்டினார்கள். பயங்கரவாதிகளால் எடுத்துச் செல்லப்பட்ட எனது ரேடியோதான் அது என நான் அடையாளம் கண்டுகொண்டேன்.

எதிரியின் சார்பில் அட்வகேட் வெட்டிக்கொன்சோ ஆஜராகியிருந்தார்.

மக்கள் குழுக்கள்

## 'பொதுப்பணிகளில் ஈடுபட முன்வரவேண்டும்'

உடுவில், செவ்.

'மக்கள் குழு மக்களின் நலன் கருதிச் செயலாற்ற வேண்டும். தனிப்பட்ட குரோதங்களை வைத்து மற்றவர்கள் மீது வஞ்சம் தீர்க்க முயன்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நாம் மக்களைப் பாதுகாப்பதும் கட்டுப்பாடு ஒழுங்குடன் வாழவைப்பதும் மக்கள் குழுவின் சேவையாகும். சிரமதானப்பணி மூலம் மக்களுக்குச் சிறந்த சேவைகள் புரியலாம். சிங்கள மக்கள் மத்தியிலுள்ள மக்கள் குழுக்கள் ஆஸ்பத்திரி நோயாளருக்கு வேண்டிய உதவிகளையும் மற்றும் பொது ஸ்தாபனங்களிலுள்ள பணிகளையும் உற்சாகமாகச் செய்துவருகின்றனர். தமிழ் மக்கள் இப்பணிகளில் ஈடுபடுவது குறைவு. எமது மக்கள் குழுக்களும் சிரமதானப் பணிகள் மூலம் மக்களுக்கு பணியாற்ற முயலவேண்டும்.

உடுவிலில் நடைபெற்ற சுன்னாகம் பட்டினசபை ஆறாம் வட்டார மக்கள் குழுக்கூட்டத்தில் ஆலோசனை வழங்கிய உடுவில் உபகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பி. எஸ். மதிநிக்கல் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் குழுக்கூட்டம் தலைவர் திரு. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

'பாடசாலைகள் சந்தைகள் போன்ற பொது இடங்களில் சிரமதானம் மூலம் சேவை புரிதல்

'தனியார்கடைகளையும், கூட்டுறவுக் கடைகளையும் பரிசீலனை செய்து மக்களுக்கு ஒழுங்காகப் பாவனைப் பொருட்கள் நியாயமான விலைகளில் கிடைக்க வழி செய்தல்.

'உள்ளூர் சந்தைகளில் விற்கப்படும் தரங்குறைந்த உணவுப் பொருட்களைத் தடைசெய்தலும் வேறு இடங்களில் அதை விற்பனை செய்யவிடாது தடைசெய்ய வேண்டுமெனவும் சுகாதார பரிசோதகரைக் கேட்பதும்.

## "ஆசிரியர் மாத்திரம் பொறுப்பல்ல"

ஆனைக்கோட்டை, செவ்

"இன்றைய சிறுவர்களே வருங்காலத்தில் இந்நாட்டை நிர்வகிக்கும் பொறுப்புக்களை ஏற்க இருக்கப்போகிறவர்கள். இவர்களின் வளர்ச்சிக்கு அத்திவாரமான முழுப்பொறுப்பும் ஆசிரியர் மாத்திரமின்றி பெற்றோருமாவர்" என்று கொழும்புத்துறை மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கு தலைமைவகித்துப் பேசிய சாவகச்சேரி நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் கூறினார்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நீதிபதி பரிசில்களை வழங்கினார். முதலாவது இடத்தை பொன்னுச்சாமி இல்லமும், இரண்டாவது இடத்தை கனகசபை இல்லமும், மூன்றாவது இடத்தை கந்தவனம் இல்லமும் பெற்றன.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 11-ம் திகதி 26-7-72

மேஷம்: நீண்ட பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். தாய் வழித் தனவரவுக்கும் இடமுண்டு.

ரிஷபம்: நீண்டநாள் கனவு நனவாகும். பதவி உயர்வுக்கும் இடமேற்படும். வீட்டிலும் அமைதியுண்டு.

மிதுனம்: நெடுநாட்களாக உங்களை நினைக்கவைக்கும். நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும்.

கடகம்: தாம்பத்திய வாழ்க்கையில் தனிச் சிறப்பு காணப்படும். பிரிந்த குடும்பங்கள் மீண்டும் இணைய நற்சந்தர்ப்பம் உண்டு.

சிம்மம்: தொழில்துறையில் போட்டாபோட்டிகள் தலைதூக்கும். உறவாடிக் கெடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

கன்னி: விருந்துபசாரங்களினால் பணம் பெருமளவில் செலவாகும். கடன் தொல்லைகளும் அதிகரிக்கும்.

துலாம்: தொழில் துறையில் மனதுக்கேற்ற வண்ணம் மாற்றங்கள் இடம்பெறும் வாய்ப்புமுண்டு.

விருச்சிகம்: பணம் தேடும் படலத்தில் வெற்றி கிடைக்க இடமுண்டு. பாவையர்கள் சிநேகிதமும் கிடைக்கலாம்.

தனுசு: பணத்தை அள்ளி வீசினாலும் பலன்கிட்டாததாக இருக்கும். புதுத் துறைகளால் மனம் புண்படும்.

மகரம்: உள்ளத்தின் அடித்தளம் வரையில் கண்ணீர் வடிக்கும். வாழ்க்கையும் வெறுப்பாக காணப்படும்.

கும்பம்: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாக காட்சியளிக்கும். இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்.

மீனம்: தாங்கள் இமைகண்டு தழுவ மறக்கும் இதயப்படுதாவில் இளமை நினைவுகள் மீண்டும் தலைதூக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கடதாசி இல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பொருட்கள் சுற்றிக் கொடுக்கும் கடுதாசி இன்மையினால் மக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர். இக் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டுமாயின் கடதாசியையும் கூடவே கொண்டு செல்லவேண்டியுள்ளது. தற்போது நிலவும் கடதாசித் தட்டுப்பாட்டினால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## படக்காட்சி

அல்லைப்பிட்டி, செவ்

வேலணை கிழக்கு அம்மன் கோவிலடியில் அல்லைப்பிட்டி சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர் திரு. ரீ. அம்போலன் தலைமையில் சுகாதாரம் சம்பந்தமான படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

## யாழ் ஆயர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஆசனக்கோவில் மைதானத்தில் இடம்பெற்ற காலஞ்சென்ற யாழ் ஆயர் மகா வந். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் இறுதிச் சடங்குகள் பற்றிய நிகழ்ச்சிகள் இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்பாகியது.

## கைப்பணிப் பொருட்காட்சி

ஆனைக்கோட்டை, செவ்

வடமாநிலப் பாடசாலைகளுக்கான கைப்பணிப் பொருட்காட்சி அடுத்த மாதம் 9ம் திகதி தொடக்கம் 11ம் திகதிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 26—7—72

(செய்திகள்: காலை 6-30, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி— மங்களவாத்தியம், 6-20 சைவ நற்சிந்தனை-எம். இராசா, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 6-50 கானாமிர்தம் 7-00 ரசமஞ்சரி 7-30 மாகாணச்செய்திகள், 7-35 வாத்திய விருந்து, 7-45 வயலின்: வி. சுந்தரலிங்கம், 8-30 இஸ்லாமிய கீதம்

மாலை 6-15 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி- நடத்துபவர்: சகோதரி மங்களம் 6-30 தாளவாத்தியக் கச்சேரி, 7-00 நாடகமேடைப் பாடல்கள் 7-15 முச்சந்தி: மதமும் மக்களும், 7-30 உலகச் செய்திகள் 7-35 வாத்திய விருந்து- கர்நாடக இசை 7-45 நாடகம்: "தனிக்கட்டை" நடராஜா எழுதியது 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 கதாப்பிரசங்கம்- வள்ளி கல்யாணமூர்த்தி நிகழ்த்துபவர்: ஆர் வடிவேலு

• • •

## கணபதி படிப்பக நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் முன்னாள் தலைவர் திரு. என். நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க. ஆர் துரைரத்தினம் உபதலைவர்: திரு ஆர். ராதாகிருஷ்ணன் போஷகர்கள்: திருவாளர்கள் அ. நவரத்தினம் (நகரசபைத் தலைவர்) க. துரைரத்தினம் (ஆட்சிமன்ற உறுப்பினர்) எஸ். ஞானமூர்த்தி (ஜே. பி.) காரியதரிசி: திரு எஸ் இராஜகோபால் உப காரியதரிசி: திரு பி இராஜேந்திரம் தனாதிகாரி: திரு ரீ குணபதிப்பிள்ளை.

**மணிவாக்கு**

ஒன்றென உணர்வது ஞானம், பலவாகக் காண்பது அஞ்ஞானம்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegrams: "EELANADU" Jaffna

Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண வருஷம் ஆடி மாதம் 11-ந் திகதி (26-7-72)


## சரியான எச்சரிக்கை

பதவிக்கு வந்ததும் பொதுமக்களை சில அமைச்சர்கள் மறந்து விடுகிறார்கள் என்று [illegible]

[illegible]

## உபயகதிர்காமத்தின் மகிமை

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகன் தான் தோன்றியாக என்றென்றும் நீங்காது நின்று திருவிளையாடல் புரியும் தலம் உபயகதிர்காமம். [illegible]

[illegible]

– தென்புலோலியூர் மாலா தம்பு –

[illegible]



[illegible]

### யு.எஸ். செனட் இயற்றிய தீர்மானம்

[illegible]

[illegible]

(5ம் பக்கம் பார்க்க)